

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.10.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழகத்தின் சார்பில் கனமழையையொட்டி அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு நேரில் சென்று, அதன் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், ஆலோசகர் கோவி. லெனின், தலைமை நிலைய அலுவலக செயலாளர் பூச்சி எஸ். முருகன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்பு செயலாளர் ஆஸ்டின் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.10.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழகத்தின் சார்பில் கனமழையை யொட்டி அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு நேரில் சென்று, அதன் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, தொலைபேசி வாயிலாக பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகளை தொடர்பு கொண்டு தேவையான உதவிகள் குறித்து கேட்டறிந்தார். உடன் கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், ஆலோசகர் கோவி. லெனின், தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் பூச்சி எஸ். முருகன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## சென்னை – எழிலகத்தில் – மாநில அவசர கால கட்டுப்பாட்டு மையத்திற்குச் சென்று

# கன மழையையொட்டி எடுக்கப்படும் நடவடிக்கைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்தார்!

சென்னை, அக். 16 –

**எழிலகத்திலுள்ள மாநில அவசர கால கட்டுப்பாட்டு மையத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று கனமழையை யொட்டி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.10.2024) சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதையொட்டி, காணொலிக் காட்சி வாயிலாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மற்றும் இராணிப் பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் தொடர்ந்து இருநாட்கள் கன மழை பெய்யவுள்ளதால் இரவு முழுவதும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என்றும், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்களின் தொலைபேசி எண்கள், இலவச அழைப்பு எண் (Toll Free Number) ஆகியவற்றை பொதுமக்கள் அனை வருக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்றும், கடலோரம் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை நேரில் சென்று அழைத்து அவர்களை முகாம்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியதோடு, முகாம் களில் தங்கியுள்ள குழந்தைகள் மற்றும் பொது மக்களுக்கு செய்து தரப்பட்டுள்ள உணவு, குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட இதர வசதிகள் குறித்து கேட்டறிந்து, சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரையும், மழையால் வீழ்ந்துள்ள மரங்களை அகற்றிடவும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும், முதலமைச்சர் அவர்கள் முகாம்களில் தங்கியுள்ள மக்களிடம் செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், உணவு வழங்கப்பட்ட விவரங்கள் குறித்தும் கேட்டறிந்து, அவர்களிடம் கவலைப்பட வேண்டாம், அரசு உங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்துதரும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வருவாய் நிருவாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் வி.மோகனசந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.அருண் ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஜெ.யு.சந்திரகலா, ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.10.2024) சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதையொட்டி காணொலிக் காட்சி வாயிலாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.அருண்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஜெயு, சந்திரகலா, ஆகியோரிடம் கனமழையையொட்டி எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் மோகனசந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று (15.10.2024) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வடகிழக்குப் பருவமழையினைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கள நடவடிக்கைகள் மற்றும மீட்புப் பணிகள் குறித்து மண்டல கண்காணிப்புக் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் என்.முருகானந்தம், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம் (மாதவரம்), கே.பி.சங்கர் (திருவொற்றியூர்), துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, கூடுதல் தலைமைச் செயலர் /துணை முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலர் பிரதீப் யாதவ், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், காணொலிக் காட்சியின் வாயிலாக மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சியின், ஒவ்வொரு மண்டலங்களிலும் கனமழைத் தொடர்பாக நேற்று இரவிலிருந்து ஆய்வுகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். மழை தொடங்கிய போது, பள்ளிக்கரணை – கோவிலம்பாக்கம் இடையிலுள்ள நாராயணபுரம் ஏரியிலிருந்து மழைநீர் வெளியேறுவதை ஆய்வு செய்த நிலையில், அப்பகுதியில் உள்ள சூழலை அதிகாரிகள் – அலுவலர்களிடம் நேரில் கேட்டறிந்தார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன், ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.



சென்னை வேளச்சேரி பகுதியில் இருந்து வெளியேறும் மழைநீரானது, வேளச்சேரி – பெருங்குடி சாலையின் குறுக்கே செல்லும் கால்வாயின் வழியாக பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதி நோக்கிச் செல்வதை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கினார். அதுபோது அரசு எடுத்தவரும் நடவடிக்கைகளுக்கு தாய்மார்கள் ஓடோடி வந்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினைச் சந்தித்து நன்றி பாராட்டினர்.




சென்னை – திருவொற்றியூர் பகுதியில் மழை நிலவரம் தொடர்பாக நேற்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். திருவொற்றியூரிலிருந்து வெளியேறுகிற மழை நீர் கார்கில் வெற்றி நகர் அருகே குட்டை ஒன்றில் சேர்கிறது. அதனை நீரேற்று நிலையம் மூலம் பக்கிங்காம் கால்வாயில் கொண்டு சேர்க்கின்ற பணியினை ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கினார்.